S11 - தாள் - 1

## தொடக்கப் பள்ளி


## ஐந்தாம் வகுப்பு – கட்டுரை

பெயர் : ______________________  தேதி : ____________

வகுப்பு : 5

பின்வரும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு, 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை / கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

1. அடுக்குமாடி வீட்டிலிருந்து
2. புகை குபு குபுவென்று
3. சற்றும் தாமதிக்காமல்
4. பொது தொலைபேசி
5. குடிமைத் தற்காப்புப் படை
6. தெரிவித்தாள்
7. உயிரையும் பொருட்படுத்தாமல்
8. உயரமான ஏணியில்
9. நீரைப் பாய்ச்சினார்கள்
10. குழந்தையை மீட்டு




85

S11 / Paper 1

www.testpapersfree.com

P5 SA1 - தாள் - 1

Q1 முதல் Q23 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில், சரியான விடையின் எண்ணுள்ள) 1, 2, 3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.

'அ ' பிரிவு

**A1 வேற்றுமை**

Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான *வேற்றுமை உருபு* ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

கோமதி தன் பெற்றோருடன் கோலாலம்பூருக்குச் சென்றாள். அதற்குமுன் அவள் அந்நகரைப் பார்த்ததில்லை. ____(1)____ தந்தை மட்டும் பலமுறை அங்குப் போயிருக்கிறார். இப்போது பள்ளி விடுமுறை என்பதால் அவர் தன் மனைவி மற்றும் ____(2)____ அங்குச் சென்றிருந்தார். அவர்கள் ____(3)____ ஒரு விடுதியில் தங்கினார்கள். மறுநாள் காலை ஒன்பது மணிக்கு ____(4)____ புறப்பட்டார்கள். அவர்கள் ____(5)____ சென்றார்கள். அது ஓர் உயரமான மலை. அவர்கள் அந்த ____(6)____ உச்சியில் இருந்த கோவிலுக்குச் சென்றார்கள். அவர்கள் மேலும் பல இடங்களைச் சுற்றிப் பார்த்தார்கள். அந்த ஒரு வார விடுமுறையை அவர்கள் மகிழ்ச்சியுடன் கழித்தனர்.

Q1.
(1) அவளால்
(2) அவளிடம்
(3) அவளுடைய
(4) அவளுக்கு
( )

Q2.
(1) பிள்ளைகளை
(2) பிள்ளைகளுடன்
(3) பிள்ளைகளால்
(4) பிள்ளைகளுக்கு
( )

Q3.
(1) கோலாலம்பூரின்
(2) கோலாலம்பூருக்கு
(3) கோலாலம்பூருடைய
(4) கோலாலம்பூரில்
( )

Q4.
(1) விடுதியில்
(2) விடுதியின்
(3) விடுதிக்கு
(4) விடுதியிலிருந்து
( )

Q5.
(1) பத்துமலைக்கு
(2) பத்துமலையில்
(3) பத்துமலையின்
(4) பத்துமலையை
( )

Q6.
(1) மலையின்
(2) மலையுடைய
(3) மலையோடு
(4) மலைக்கு
( )

86



www.testpapersfree.com

A2 செய்யுள் / பழமொழி

Q7 முதல் Q12 வரையுள்ள *செய்யுள் / பழமொழியை* நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு .அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

Q7. செயற்கரிய __________ பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

(1) தருவார்
(2) பெறுவார்
(3) செய்வார்
(4) எடுப்பார் ( )

Q8. __________ விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும்.

(1) அணைகிற
(2) பிரகாசிக்கிற
(3) மின்னுகிற
(4) எரிகிற ( )

Q9. எறும்பு __________ கல்லும் தேயும்.

(1) நடக்க
(2) ஊர
(3) செல்ல
(4) நகர ( )

Q10. காலத்தினாற் செய்த நன்றி __________
ஞாலத்தின் மாணப் பெரிது.

(1) சிறப்பெனினும்
(2) பெரிதெனினும்
(3) சிறிதெனினும்
(4) அரிதெனினும் ( )

Q11. __________ கட்டிப் பெருக வாழ்.

(1) நிறைய
(2) உயர
(3) அதிக
(4) சிறுக ( )

Q12. தேடாது அழிக்கின் __________ முடியும்.

(1) போராய்
(2) பாடாய்
(3) கேடாய்
(4) துயராய் ( )



87

www.testpapersfree.com

**B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்**
பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி:

குமார் என்ற பணக்காரச் சிறுவனும் கந்தன் என்ற ஏழைச் சிறுவனும் நண்பர்களாய் வாழ்ந்தனர். குமார் மிகவும் அன்பானவன். அதனால், கந்தன் மிகவும் மகிழ்ச்சியுடன் அவனோடு பழகினான்.

கந்தனுக்குத் தோட்டக்கலையில் அதிக ஆர்வம் உண்டு. அவன் தன் ஓய்வு நேரத்தில் வீட்டில் பலவகையான மலர்ச்செடிகளைப் பயிர் செய்து, கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தான். அவனது கடின உழைப்பால் அச்செடிகள் செழிப்பாக வளர்ந்தன. கந்தன் வளர்த்த மலர்ச்செடிகளில் ஒரு வெள்ளை ரோஜாச் செடி மிகவும் செழித்து வளர்ந்திருந்தது. அந்தச் செடியில் ஒரு மிகப் பெரிய ரோஜாப்பூ மலர்ந்து, எல்லாரையும் வியப்படையச் செய்தது.

ஒருநாள் குமாரின் வீட்டில் ஒரு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கந்தனுக்கு ஒரு யோசனை உண்டானது. அவன், "இந்த ரோஜாப்பூவைச் சந்தையில் விற்றால் ஐந்து வெள்ளி பணம் கிடைக்கும். ஆனால். இதை நான் என் நண்பனுக்குப் பரிசாக அளித்தால் அவனின் விலைமதிப்பற்ற அன்பு எனக்குக் கிடைக்கும். அதுவே, எனக்குப் பெரும் செல்வமாகும்," என்று எண்ணினான்.

அவன் அப்பூவைக் கொண்டுபோய் குமாரிடம் கொடுத்தான். விருந்திற்கு வந்த பலரும் பணத்தைத்தான் அன்பளிப்பாகக் கொடுத்தார்கள். ஆனால், சுய உழைப்பால் உருவாக்கிய ஒரு பொருளை, கந்தன் கொடுத்ததை எண்ணிப் பாராட்டினான் குமார். அவனுடைய நல்ல குணத்துக்காக விலையுயர்ந்த பேனா ஒன்றைக் கந்தனுக்குப் பரிசாக வழங்கினான்.

குமாரின் அண்டைவீட்டில், விமலன் என்ற ஒரு பேராசைக்காரச் சிறுவன் வசித்து வந்தான். அவனும் குமாரின் நண்பன்தான். ஆனால், அவனுக்குக் கந்தன்மீது பொறாமை ஏற்பட்டது. அவனிடம், 'கொழு கொழு' என்று வளர்ந்த பூனைக்குட்டி ஒன்று இருந்தது. அதைக் குமாருக்குக் கொடுத்தால், தனக்கும் நல்ல சன்மானம் கிடைக்கும் என்று எண்ணி, பூனைக்குட்டியைக் குமாரிடம் கொடுத்தான். உடனே, குமார், "நான் மிக உயர்வாக மதிக்கும் ஒரு பொருளை உனக்குப் பரிசாகத் தரப்போகிறேன்," என்று கூறி ரோஜாப்பூவை அவன் கையில் கொடுத்தான். விமலனின் முகம் வாடிப் போனது. அவன் பேராசை பெரு நட்டம் என்பதை அப்போது உணர்ந்தான்.

88



www.testpapersfree.com

Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q13. கந்தனின் செடிகள் நன்றாக வளரக் காரணம் என்ன?

(1) கந்தனுக்குத் தோட்டக்கலையில் இருந்த ஆர்வத்தால்
(2) கந்தனின் கடின உழைப்பால்
(3) தினமும் கந்தன் செடிகளைப் பார்க்கச் சென்றதால்
(4) கந்தன் செடிகளுக்கு நிறைய நீர் ஊற்றியதால் ( )

Q14. அனைவரையும் வியப்படைய வைத்தது எது?

(1) குமார் வீட்டில் நடந்த விருந்து
(2) தோட்டத்தில் பூத்திருந்த வெள்ளை ரோஜா
(3) கந்தன் குமாரின் அன்பைப் பெற நினைத்தது
(4) கந்தனின் வீட்டுத் தோட்டத்தில் உள்ள பூச்செடிகள் ( )

Q15. கந்தன் எதைப் பெரும் செல்வமாகக் கருதினான்?

(1) தான் வாழும் எளிமையான வாழ்க்கையை
(2) தோட்டத்தில் செழித்திருக்கும் செடிகளை ( )
(3) குமாரிடமிருந்து கிடைக்கும் உண்மையான அன்பை
(4) தனக்குக் கிடைக்கப்போகும் பாராட்டை

Q16. குமார் கந்தனைப் பாராட்டக் காரணம் என்ன?

(1) அவன் நல்ல எண்ணம் கொண்டிருந்ததால்
(2) அவன் நேர்மையாக நடந்து கொண்டதால்
(3) அவன் விலை உயர்ந்த பரிசு கொடுத்ததால் ( )
(4) அவன் நல்ல உழைப்பாளி என்பதால்

Q17. விமலன் தனது பூனைக்குட்டியை ஏன் குமாரிடம் கொடுத்தான்?

(1) குமாரின் அன்பைப் பெற
(2) விருந்தினரின் பாராட்டைப் பெற
(3) குமாரிடமிருந்து பரிசு பெற ( )
(4) கந்தனுக்குப் பாடம் கற்பிக்க



89

www.testpapersfree.com

**B4 சொற்பொருள்**

Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் *பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு.* அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q18. மகிழ்ச்சியுடன்

(1) நம்பிக்கையுடன்
(2) களிப்புடன்
(3) அமைதியுடன்
(4) அன்புடன்

( )

Q19. வியப்படைய

(1) அதிர்ச்சியடைய
(2) சந்தேகமடைய
(3) பொறாமையடைய
(4) ஆச்சரியமடைய

( )

Q20. சன்மானம்

(1) ஊதியம்
(2) நற்பெயர்
(3) வெகுமதி
(4) நன்கொடை

( )

90




www.testpapersfree.com

C5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:

# நூல் வெளியீட்டு விழா



பிரபல உள்ளூர் எழுத்தாளர் தங்கமுத்துவின் புத்தக வெளியீடு. வெளியீட்டு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு புத்தகம் வாங்குவோருக்கு விலையில் 25% கழிவு வழங்கப்படும்.

100 வெள்ளி மதிப்புள்ள புத்தகங்கள் வாங்கும் முதல் 50 பேருக்கு இலவச அன்பளிப்பு கிடைக்கும்.

சிறுவர் முதல் பெரியவர்கள் வரை படித்து மகிழப் பல வகையான புத்தகங்கள் இந்தியா, இலங்கை மற்றும் பல நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

நாள் : 18.11.2011 (சனிக்கிழமை)

நேரம் : காலை 8 மணி முதல் மாலை 7 மணி வரை
(புத்தகக் கண்காட்சி)

மாலை 4 மணி முதல் 5 மணி வரை
(புத்தக வெளியீடு)

இடம் : சாங்கி சமூக மன்றம்



91

www.testpapersfree.com

Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ***ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு.*** அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q21. வெளியிடப்படும் புத்தகத்தை எழுதியவர் யார்?

(1) சிறுவர்களும் பெரியவர்களும்
(2) இக்கால எழுத்தாளர்
(3) பிரபல வெளியூர் எழுத்தாளர்
(4) பிரபல உள்ளூர் எழுத்தாளர்

( )

Q22. இக்கண்காட்சியில் யாருக்கு இலவச அன்பளிப்பு கிடைக்கும்?

(1) கண்காட்சிக்கு வரும் முதல் 100 பேருக்கு
(2) 50 வெள்ளி மதிப்புள்ள புத்தகங்கள் வாங்கும் முதல் 100 பேருக்கு
(3) 100 வெள்ளி மதிப்புள்ள புத்தகங்கள் வாங்கும் முதல் 50 பேருக்கு
(4) வெளியிடப்படும் புத்தகத்தை வாங்குபவருக்கு

( )

Q23. புத்தக விலையில் 25% கழிவு யாருக்கு வழங்கப்படும்?

(1) 100 வெள்ளிக்கு மேல் புத்தகங்களை வாங்குபவர்களுக்கு
(2) இலவச அன்பளிப்பு கிடைப்பவர்களுக்கு
(3) புத்தக வெளியீட்டு நிகழ்ச்சியில் பங்கேற்பவர்களுக்கு
(4) கண்காட்சிக்கு வரும் அனைவருக்கும்

( )

ஃஃஃ 'அ' பிரிவு முடிவடைகிறது ஃஃஃ

92



www.testpapersfree.com

'ஆ' பிரிவு

C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து *ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து* அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.

(10 மதிப்பெண்கள்)

Q24. பொங்கலுக்கு முன்தினம் அம்மா வீட்டு வாசலில் ____________ போட்டார். அது பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது. Q24. (    )

Q25. சாலையில் ஒரு வாகனம் தீப்பிடித்து ____________. விரைந்து வந்த தீயணைப்புப் படையினர் அத்தீயை உடனே அணைத்தனர். Q25. (    )

Q26. என் பாட்டிக்கு ____________ வயதாகிறது. அவரின் பிறந்தநாளை நாங்கள் சிறப்பாகக் கொண்டாடினோம். Q26. (    )

Q27. கவிதா நடன ____________ கெட்டிக்காரி. அவள் அதில் சிறு வயதிலிருந்தே ஈடுபட்டு வருகிறாள். Q27. (    )

Q28. நெருப்புக்கோழி மிகவும் பெரிய ____________. அது வேகமாக ஓடும். Q28. (    )

| | |
|---|---|
| (1) எண்பது | (2) களையில் |
| (3) எரிந்தது | (4) கோலம் |
| (5) பறவை | (6) என்பது |
| (7) கோளம் | (8) எறிந்தது |
| (9) கலையில் | (10) பரவை |



93

www.testpapersfree.com

**D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து *ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து* அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

பசியால் வாடிக்கொண்டு இருந்த குள்ளநரி ஒன்று இரை தேடி அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தது. அப்போது அது ஒரு கௌதாரியைக் கண்டது. கௌதாரி ஒரு சிறு ___(Q29)___ மேல் நின்று பாடிக்கொண்டிருந்தது. கௌதாரியை எப்படியாவது ஏமாற்றி தனக்கு ___(Q30)___ வேண்டும் என்று நரி முடிவு செய்தது.

அது கௌதாரியை நெருங்கி, "நண்பனே! நீ மிகவும் இனிமையாகப் பாடுகிறாய். ஆனால், நீ ___(Q31)___ இருப்பதால் எவராலும் உன் இனிய குரலைச் சரியாகக் கேட்க முடியவில்லை. நீ கீழே வந்து பாடினால் அனைவராலும் உன் பாடலை நன்கு கேட்டு ___(Q32)___ முடியும். உனக்குப் பாராட்டுகளும் கிடைக்கும். அது உனக்கு ___(Q33)___," என்று கூறியது.

நரி கூறியதைக் கேட்டு கௌதாரி மகிழ்ந்தது. விளைவுகளைப்பற்றிச் சிறிதும் ___(Q34)___ அது உடனே குன்றிலிருந்து கீழே வந்தது. அத்தருணத்திற்காகக் காத்துக்கொண்டிருந்த குள்ளநரி உடனே கௌதாரியை ___(Q35)___ பிடித்தது. அப்போதுதான் கௌதாரி தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தது.

Q29(  )
Q30(  )
Q31(  )
Q32(  )
Q33(  )
Q34(  )
Q35(  )

| | | |
|---|---|---|
| (1) ரசிக்க | (2) கௌவி | (3) உயரத்தில் |
| (4) அடிமையாக்கிக்கொள்ள | (5) குன்றின் | (6) தாமதிக்காமல் |
| (7) அழகாக | (8) சம்மதம்தானே | (9) வாழ்த்த |
| (10) பெருமைதானே | (11) யோசிக்காமல் | (12) இரையாக்கிக்கொள்ள |



94

www.testpapersfree.com

**D8 சுயவிடைக் கருத்தறிதல்**
பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

ரவீந்திரநாத் தாகூர் உலகம் போற்றும் ஒப்பற்ற கவிஞராவார். அவர் கல்கத்தாவில் ஒரு பெருஞ்செல்வருக்கு மகனாகப் பிறந்தார். தாகூரின் தந்தை ஆடம்பர வாழ்க்கையை வெறுத்தார். அவர் எளிய வாழ்க்கை வாழ்ந்ததோடு மட்டுமல்லாமல் தம் பிள்ளைகளையும் அவ்வாறே வளர்த்தார்.

ஒரு சமயம் தாகூரின் தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர் அவரின் பாடல் எழுதும் திறமையைப்பற்றிக் கேள்விப்பட்டார். அவர் தாகூரைப் பாடல் ஒன்றை எழுதிக் காட்டச் சொன்னார். பதினொரு வயதேயான தாகூர் எழுதிக் கொடுத்த பாடலின் அருமையான பொருளையும் சொற்களின் அழகையும் கண்டு அவர் வியந்தார். எதிர்காலத்தில் அச்சிறுவன் புகழ்பெற்ற கவிஞனாக விளங்குவான் என அவர் உறுதியாக நம்பினார்.

சிறிது காலத்துக்குப் பிறகு பள்ளிப் படிப்பை விரும்பாத தாகூர், வீட்டிலிருந்தபடியே கற்கத் தொடங்கினார். அவர் உடன்பிறந்தவர்கள் அனைவரும் ஒவ்வொரு கலையில் சிறந்து விளங்கினர். அதனால், அவர் அவர்களின் துணையுடன் வீட்டிலிருந்தபடியே பல கலைகளிலும் தேர்ச்சியடைந்தார். பிறகு தன் குடும்பத்தினரின் ஆசைப்படி லண்டனுக்குச் சென்றார். அங்கு அவர் ஒன்றரை ஆண்டு தங்கிப் படித்தார். ஆனால், அவருக்கு அந்த வாழ்க்கை பிடிக்காததால் தன் கல்வியைப் பாதியிலேயே விட்டுவிட்டு இந்தியாவுக்குத் திரும்பினார்.

நாளடைவில் கலைத்துறைதான் தாகூரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அவர் கவிதைகள், நாடகங்கள் ஆகியவற்றை எழுதுவதில் ஈடுபட்டார். நாட்டுப் பற்றுடன் தாய்மொழிப் பற்றும் உடையவர் தாகூர். அவர் ஆங்கிலத்தில் புலமை பெற்றவர். ஆயினும் தான் இயற்றிய அனைத்து நூல்களையும் தன் தாய்மொழியான வங்காள மொழியிலேயே எழுதினார்; பின்னர்தான் அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். மேலும் பள்ளிகளில் தாய்மொழிமூலம்தான் அனைத்துப் பாடங்களையும் கற்பிக்க வேண்டுமென்பது அவர் கொள்கை.

தாகூர் இயற்றிய உலகப் புகழ்பெற்ற நூல் 'கீதாஞ்சலி' என்பதாகும். அவரின் திறமையைப் பாராட்டி 1913ஆம் ஆண்டு அவருக்கு இலக்கியத்திற்கான நோபெல் பரிசு வழங்கப்பட்டது.



95

www.testpapersfree.com

36 முதல் 41 வரை உள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)

36. பணக்காரக் குடும்பத்தில் பிறந்த தாகூர் ஏன் எளிமையான சூழ்நிலையில் வாழ்ந்தார்? (3)

37. தாகூர் ஒரு பாடலை எழுதித் தன் தலைமையாசிரியரிடம் கொடுக்கக் காரணம் என்ன? (3)

38. சிறுவனான தாகூர் எதிர்காலத்தில் புகழ்ப்பெற்ற கவிஞராவான் என்று தலைமையாசிரியருக்கு நம்பிக்கை அளித்தது எது? (4)



96

www.testpapersfree.com

39. தாகூரால் எவ்வாறு வீட்டிலேயே இருந்தபடி பலவற்றில் தேர்ச்சி பெற முடிந்தது? (3)

______________________________________________

______________________________________________

______________________________________________

40. தாகூருக்குலண்டனுக்குப் படிக்கச் சென்ற அனுபவம் எப்படி இருந்தது? (2)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

41. தாகூர் தாய்மொழிப் பற்று மிக்கவர் என்பதை எவற்றின் மூலம் அறியலாம்? (5)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________



97

www.testpapersfree.com

Primary - 5 SA - 1 தாள் - 1

கோமதி தன் பெற்றோருடன்.........

1. 3 2. 2 3. 4 4. 4 5. 1 6. 1

7. 3 8. 4 9. 2 10. 3 11. 4 12. 2

13. 2 14. 2 15. 3 16. 4 17. 3

18. 2 19. 4 20. 3

21. 4 22. 3 23. 3

24. 4 25. 3 26. 1 27. 9 28. 5

29. 5 30. 12 31. 3 32. 1 33. 10 34. 11 35. 2

36. தாகூரின் தந்தை ஆடம்பர வாழ்க்கையை வெறுத்தார். அவர் எளிய வாழ்க்கை வாழ்ந்ததோடு மட்டுமல்லாமல் தம் பிள்ளைகளையும் அவ்வாறே வளர்த்ததால் பணக்காரக் குடும்பத்தில் பிறந்த தாகூர் எளிமையான சூழ்நிலையில் வளர்ந்தார்.

37. தாகூரின் தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர் தாகூரின் பாடல் எழுதும் திறமையைப் பற்றிக் கேள்விப்பட்டு பாடல் ஒன்றை எழுதிக் காட்டச் சொன்னதே தாகூர் ஒரு பாடலை எழுதித் தன் தலைமை ஆசிரியரிடம் கொடுக்கக் காரணமாகும்.

38. பதினொரு வயதான தாகூர் எழுதிக் கொடுத்த பாடலின் அருமையான பொருளும், சொற்களின் அழகும் கண்டு வியந்தது சிறுவனான தாகூர் எதிர்காலத்தில் புகழ்ப்பெற்ற கவிஞராவான் என்ற நம்பிக்கையை தலைமையாசிரியருக்கு அளித்தது.

39. தாகூரின் உடன்பிறந்தவர்கள் அனைவரும் ஒவ்வொரு கலையில் சிறந்து விளங்கினர். அதனால், அவர் அவர்களின் துணையுடன் வீட்டிலேயே இருந்தபடி பலவற்றில் தேர்ச்சி பெற முடிந்தது.

40. அவருக்கு அந்த வாழ்க்கை பிடிக்காததால் தன் கல்வியை பாதியிலேயே விட்டுவிட்டு இந்தியாவுக்குத் திரும்பினார்.

98

www.testpapersfree.com

41. அவர் ஆங்கிலத்தில் புலமை பெற்றவராக இருந்ததும், தான் இயற்றிய அனைத்து நூல்களையும் தன் தாய்மொழியான வங்காள மொழியிலேயே எழுதினார். பிறகுதான் அவர் அவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். மேலும், பள்ளிகளில் தாய்மொழி மூலம் தான் எல்லாப் பாடங்களையும் கற்பிக்க வேண்டும் என்பது அவருடைய கொள்கை. தாகூர் தாய்மொழிப்பற்று மிக்கவர் என்பதை இவற்றின் மூலம் அறியலாம்.

99

www.testpapersfree.com

PRIMARY SCHOOL

SEMESTRAL ASSESSMENT 1

PRIMARY FIVE

TAMIL LANGUAGE

பெயர் : ____________________ தேதி : ________________

வகுப்பு : தொ.நி: 5 ______ மதிப்பெண்கள் : ___________/90

Total Time : 1h 400 min

INSTURCTIONS

Do not open the booklet until you are told to do so.

Follow aal instructions carefullu.

Answer all questions.

100

www.testpapersfree.com